Bodhi International Journal of Research in Humanities, Arts and Science
Vol. 10 Special Issue 6 March 2026
E-ISSN: 2456-5571

# திருக்குறளின் வழி அறியலாகும் நிர்வாக ஆளுமை (Administrative Leadership Defined in Thirukural)

**Dr. D. Jayanthi**
*Assistant professor, Faculty of Science and Humanities*
*SRM Institute of Science and Technology, Kattankulathur, Chennai*

Open Access

Manuscript ID:
BIJ-SPL6-MAR26-MD-325

Subject: Tamil

Received : 30.01.2026
Accepted : 05.02.2026
Published : 25.03.2026

DOI: 10.64938/bijsi.v10si6.26.Mar325

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**Abstract**

*Management is a framework that helps in smooth running of the day-to-day operations of an organization and leads to its long-term success. Management personality is a combination of unique characteristics, skills and behaviors that enable an organization to achieve its goals by planning, making decisions, leading a team and using resources properly, with integrity. It ensures the success of the organization through accountability, transparency and excellent communication skills. In the Thirukkural, many verses provide excellent guidance on administration, management and leadership qualities. Valluvar particularly emphasizes on employee selection, planning, time management and working efficiently. The aim of this article is to highlight them.*

**Keywords: Thirukkural, Administration, Leadership, Management**

***ஆய்வுச்சுருக்கம்***

*நிர்வாகம் என்பது ஒரு நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளைச் சீராக நடத்தவும், அதன் நீண்டகால வெற்றிக்கு வழிவகுக்கவும் உதவும் ஒரு கட்டமைப்பு ஆகும். நிர்வாக ஆளுமை என்பது ஒரு அமைப்பின் இலக்குகளை அடைய, திட்டமிடல், முடிவெடுத்தல், குழுவை வழிநடத்துதல் மற்றும் வளங்களைச் சரியாகப் பயன்படுத்தி, நேர்மையுடன் செயல்பாடுகளை நிர்வகிக்கும் தனித்துவமான பண்புகள், திறன்கள் மற்றும் நடத்தைகளின் கலவையாகும். இது பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த தொடர்பாடல் திறன் மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்கிறது. திருக்குறளில் நிர்வாகம், மேலாண்மை மற்றும் தலைமைப் பண்புகள் குறித்துப் பல குறள்கள் மிகச்சிறந்த வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. குறிப்பாகப் பணியாளர் தேர்வு, திட்டமிடல், காலம் அறிதல் மற்றும் திறமையாகச் செயல்படுதல் ஆகியவை பற்றி வள்ளுவர் வலியுறுத்துகிறார். அவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***கருச்சொற்கள்: திருக்குறள், நிர்வாகம், தலைமைப்பண்பு, மேலாண்மை***

## நிர்வாக ஆளுமையின் முக்கியக் கூறுகள்:

குழு உறுப்பினர்களின் திறன்களை அறிந்து, அதைச் சரியான முறையில் வெளிக்கொண்டுவந்து வேலை வாங்குதல். சவாலான சூழ்நிலைகளில் தோல்விகளைக் கண்டு அஞ்சாமல், தன்னம்பிக்கையுடன் முடிவுகளை எடுக்கும் பண்பு. எடுக்கப்படும் முடிவுகள் மற்றும் அதன்

Vol. 10 Special Issue 6 March 2026
E-ISSN: 2456-5571

விளைவுகளுக்குப் பொறுப்பேற்கும் தன்மை. செயல்பாடுகளில் ஒளிவுமறைவற்ற, நெறிமுறை சார்ந்த அணுகுமுறையைக் கையாளுதல். சிறந்த தகவல்தொடர்பு மூலம் குழுவுடன் தொடர்பில் இருந்து இலக்குகளை அடைதல். ஆகியவை நிர்வாக ஆளுமையின் முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றது. சுருக்கமாகச் சொன்னால், நிர்வாக ஆளுமை என்பது ஒருவரைச் சிறந்த தலைவராக மாற்றும், நிர்வாகத் திறன்கள் மற்றும் தனிப்பட்ட பண்புகளின் ஒட்டுமொத்த கலவையாகும்.

**தலைமைப்பண்பு**

தலைமைப்பண்பு என்பது ஒரு குழுவை உற்சாகத்துடன் வழிநடத்தி, பொதுநலனை முன்னிறுத்தி, முன்மாதிரியாகச் செயல்படும் திறமையாகும். இது வெறும் அதிகாரமல்ல, மற்றவர்களை ஊக்குவித்து, சவால்களை எதிர்கொண்டு, கடின உழைப்பு மற்றும் பொறுப்புணர்வுடன் இலக்கை அடையும் நற்பண்பாகும். தனக்குக்கீழ் செயல்படுபவர்களின் தனித்திறனை அறிந்து அவர்களுக்குரிய பணிகளை ஒதுக்கீடு செய்வது தலைமைக்குரிய தனித்திறனாகும் இதனை வள்ளுவர்,

**“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல்”** (குறள் 517)

என்ற குறளில் இந்தச் செயலை இவன் இம்முறையில் செய்து முடிப்பான் என்று தெரிந்து அச்செயலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தலைமைப்பண்பிற்குரிய திறனை விளக்கியுள்ளார். ஒரு செயலைச் செய்வதற்கு உரிய கருவி, ஏற்ற காலம், செய்யும் முறை, செய்யும் விதம் ஆகியவற்றை அறிந்து சிறப்பாகச் செயல்படுபவனே சிறந்த நிர்வாகி என்பதை கீழ்க்காணும் திருக்குறளின் வழி அறியமுடிகின்றது.

**“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு.”** (குறள் 631)

செயலுக்குத் தேவையான கருவி, காலம், செய்யும் முறை, மற்றும் கடினமான செயல்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் ஆகியவையே சிறந்த நிர்வாகமாகும்.

**"கற்றிலனாயினும் கேட்க அஃதொருவர்க்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை"** (குறள் 414)

நூல்களைக் கற்றவில்லையாயினும், கற்றறிந்தவர்களிடம் கேட்டறிய வேண்டும், அது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்த போது ஊன்றுகோல் போல் துணையாகும்

**“ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும்”** (குறள் 763)

என்பது, படைபலம் குறைந்த எலிகள் கடல்போல ஆர்ப்பரித்தாலும், வலிமைமிக்க நாகத்தின் மூச்சுக்காற்றால் சக்தியால் அவை அழிந்துபோவதுபோல, சிறிய படைகள் திரண்டு வந்தாலும், சிறந்த வீரன் ஒருவனின் நாகம் போன்ற மூச்சால் சக்தியால் அழிந்துபோகும் என்றாகும். எதிரிப் படைகள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அதன் அளவு முக்கியமல்ல; அதன் வலிமையே முக்கியம். வலிமையற்ற படைகள் திரண்டு வந்தாலும், பெரிய வீரனை எதிர்த்து நிற்க முடியாது, அவன் ஒரு மூச்சுவிட்டால் போதும், அவை அழிந்துவிடும். மேலும்,

**அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.** (குறள் 382)

என்னும் குறளில் பகைவர்க்கும் அநீதிக்கும் அஞ்சாமை, வறியோருக்குக் கொடுத்தல், அறிவார்ந்து செயல்படுதல், மற்றும் முயற்சி உடையவராக இருத்தல் ஆகியவை சிறந்த ஆட்சியாளரின் அடையாளங்களாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**திட்டமிட்டுச் செய்தல்**

திட்டமிட்டுச் செய்தல் என்பது ஒரு இலக்கை அடைய, முன் கூட்டியே அதற்கான வழிமுறைகளை வகுத்து, புத்திசாலித்தனமாக உழைத்து, வெற்றியை உறுதி செய்யும் செயல்முறையாகும். இது நேர மேலாண்மை, சரியான முதலீடு, மற்றும் தேவையற்ற உழைப்பைக் குறைத்து, மனநிறைவான பலன்களைப் பெற உதவுகிறது.

**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு."** (குறள் 467)

என்ற குறள் வழி ஒரு செயலைச் செய்யும் முன் நன்றாக ஆலோசித்துத் தொடங்க வேண்டும்; தொடங்கிய பிறகு ஆராய்வோம் என்று இருப்பது இழுக்கு என்று விளக்கியுள்ளார்.

**நிர்வாகத் திறன்**

நீதிநெறிப்படி ஆட்சி செய்து மக்களைப் பாதுகாக்கும் அரசன், சாதாரண மனிதனாகப் பிறந்தாலும், மக்களால் கடவுளாகவே மதிக்கப்படுவான். நீதி முறை தவறி

நலியாமல் காப்பவனே சிறந்த தலைவன் என்பது இதன் பொருள்

***முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு***
***இறையென்று வைக்கப் படும்."*** **(குறள் 388)**

செங்கோன்மை (முறையான நிர்வாகம்) கொண்டு மக்களைக் காப்பவனே சிறந்த தலைவன்.

**நேரம் அறிதல்**

ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய, தேவையான நடவடிக்கைகளை முன்கூட்டியே சிந்தித்து, வரிசைப்படுத்தி, கிடைக்கும் வளங்களைச் சரியாகப் பயன்படுத்திச் செயல்படும் ஒரு செயல்முறையாகும். இது எதிர்காலச் சவால்களை முன்கூட்டியே கணித்து, நேரத்தையும், முயற்சியையும் மிச்சப்படுத்தி, தோல்வியைத் தவிர்த்து, வெற்றியையும், உயர் செயல்திறனையும் உறுதி செய்ய உதவும். ஏற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து, முறையான திட்டமிடலுடன் செயல்பட்டால் உலகத்தையே வெல்லலாம். என்பதை

***ஞாலம் கருதினுங் கைக்கூடுங் காலம்***
***கருதி இடத்தாற் செயின்."***

**(குறள் 485)**

என்னும் குறளின் வழி விளக்கியுள்ளார்.

**குழு மேலாண்மை**

குழு மேலாண்மை என்பது பொதுவான இலக்குகளை அடைய, தனிநபர்களின் குழுவை ஒருங்கிணைத்து, வழிநடத்தி, ஊக்கப்படுத்தி, அவர்களின் செயல்திறனை அதிகப்படுத்தும் ஒரு செயல்முறையாகும். இது சிறந்த தகவல் தொடர்பு, முரண்பாடுகளைத் தீர்த்தல், தெளிவான இலக்கு நிர்ணயம் மற்றும் குழுப்பணியை ஊக்குவித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. திறமையான குழு மேலாண்மை வணிக சவால்களை வெல்லவும், புதுமையான தீர்வுகளை உருவாக்கவும் உதவுகிறது. இதனை கீழ்க்காணும் குறளில் வள்ளுவர் விளக்கியுள்ளார்.

***"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்***
***துணைவலியும் தூக்கிச் செயல்."***

**(குறள் 471)**

ஒரு செயலின் வலிமை, தன் வலிமை, எதிரியின் வலிமை, துணைவரின் வலிமை ஆகியவற்றை ஆராய்ந்து நிர்வாகம் செய்ய வேண்டும்.

**வருவாய் நிர்வாகம்**

அரசு மற்றும் குடிகள் சேர்ந்த நாட்டின் வருமானத்தைப் பெருக்குவதற்கு உரிய பொருளாதாரத்தைப் பழந்தமிழகத்தில் இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் என்னும் நான்கு தலைப்பின் கீழ் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றாக,

***இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த***
***வகுத்தலும் வல்லது அரசு*** **(குறள் 385)**

என்ற குறள் அமைந்துள்ளது இவற்றுள் இயற்றலாவது வருவாய் வரும் வழிகளை அமைத்தல் (organization of resources) அதற்குரிய பொருள்களாவன நெல் முதலான தானிய வகைகள், ஆடு, மாடு, குதிரை, யானை முதலான விலங்கினங்கள், பொன், முத்து முதலான விலையுயர்ந்த பொருட்கள் முதலியன. அத்துடன் பிற நாடுகளைக் கைப்பற்றித் திறை கோடலும் பகைவரைக் கொள்ளையடித்தலும் இயற்றலுக்குரிய வழிகளாகும்.

ஈட்டலாவது அங்ஙனம் கிடைக்கப் பெற்ற வருவாய்களிலிருந்து கிடைக்கும் பொருட்களை மூலபண்டாரத்தில் (பழந்தமிழாட்சி பக்.70)சேர்த்தல், காத்தலாவது அங்ஙனம் சேர்த்து வைத்த செல்வத்தை வேறு யாரும் கவர்ந்து செல்லாமல் பாதுகாத்தலாகும். வகுத்தல் என்பது அவ்வாறு காத்து வரும் பொருட்களைத் தேவைக்கேற்ப அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுச் செலவிடுதலாகும்.

***"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்***
***தேர்ந்துசெய் வஃதே முறை."***

**(குறள் 551)**

ஆராய்ந்து, பாரபட்சமின்றி, அனைவருக்கும் நீதியாகச் செயல்படுவதே செங்கோன்மை (நல்லாட்சி) ஆகும்.

**முடிவுரை**

திருக்குறள் ஒரு சிறந்த மேலாண்மை மற்றும் நிர்வாக வழிகாட்டி. இது தெளிவான இலக்கு, திட்டமிடல், பணியாளர் தேர்வு, ஊக்கம் தீர்க்கமான முடிவெடுத்தல், அஞ்சாமை மற்றும் அறநெறியுடன் கூடிய தலைமைத்துவத்தை வலியுறுத்துகிறது மேலாளர் தன் திறமையையும், நேரத்தையும் சரியாகப் பயன்படுத்தி, தகுந்த பணியாளர்களைக் கொண்டு வேலையை முடிப்பதே சிறந்த நிர்வாகம் எனத் திருக்குறள் உணர்த்துகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. பரிமேலழகர் உரை - திருக்குறள்
2. மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் – பழந்தமிழாட்சி திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (சென்னை)
3. ப. ரவி - கல்வி நிர்வாகமும் மேலாண்மையும் – சாரதா பதிப்பகம் – 2014.